REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இணைப்பில் 10 சதம் ★ PHONE: 85630

# நம் நாடு

திமுக தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 2உ வெள்ளி (18—10—57) ★ வெளியூர்: ஐப்பசி 3உ சனி (19—10—57) [இதழ் 108

## மேலும் ஒரு அநியாயம்!

★

சென்னை, அக். 18—

தொலைபேசி (டெலிபோன்)மூலம் அதிக வருமானம் தேடும் முயற்சிகளிலும் ஈடுபட்டுவிட்டனர் டெல்லிப் பெரியவர்கள்!

தொலைபேசிக்கான வாடகைத் தொகையை அதிகரிப்பது பற்றி ஆராய்ந்து வருகின்றனர்!

சென்னை நகரில் பொதுமக்கள் 2 அணா செலவில் தொலைபேசி மூலம் பேசுவதற்காக உள்ள வசதியை, இனி 4 அணா செலவிட்டுப் பேசவேண்டிய நிலையை உருவாக்கும் பணியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனராம்.

# 'பதினான்கு மொழிகளும் தேசிய மொழி' என்கிறார் பண்டிதர்!

# 'இல்லை; இந்திதான் தேசிய மொழி' என்கிறார் இராசேந்திரர்!

## 'இந்த முரண்பட்ட கருத்துக்களின் நோக்கம் என்ன?

## 'சுவிட்சர்லாந்து நாட்டில் மூன்றுமொழிகளுக்கு சமஅந்தஸ்து தந்திருக்கிறார்களே!'

## 'இந்தியாவில் ஒரு மொழி மட்டும் ஏற்றம் பெறுவது நீதியா?'

ஈ. வெ. கி. சம்பத் நிலை விளக்கம்

13—10—57-ல், சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த மாபெரும் இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில், தோழர் ஈ.வெ கி. சம்பத் அவர்கள், இந்திய அரசியலிலே இந்தித் திணிப்பு எந்த வகையிலே உருவெடுத்து ஆதிக்கம் செலுத்த வருகிறது என்பதையும், இந்திப் பிரச்சினைக்குப் பின்னாலே ஒளிந்திருக்கின்ற ஆதிக்க வெறியை—சூழ்ச்சி எண்ணத்தை அம்பலப்படுத்தியும் அரியதோர் கருத்து விளக்கச் சொற்பொழிவாற்றினார்; அந்தச் சொற்பொழிவின் பிற்பகுதி இங்கு தரப்படுகிறது (முற்பகுதி முன்பே வெளியாகியுள்ளது):—

"இன்றையத்தினம் தி. மு. கழகம், இந்த நாட்டிலிருக்கின்ற பழுத்த அரசியல் தலைவர்களுக்கும், மற்றக் கட்சிகளுக்கும் இந்தித் திணிப்பின் பேராபத்தை எடுத்துக் கூறிக்கொண்டிருக்கிறது; இந்தப் பிரச்சினையின் பின்னாலே பொதிந்திருக்கின்ற பேராபத்தின் தன்மையைத் தமிழ்நாட்டிலே இருக்கின்ற எல்லா மக்களும் உணர்ந்து தீர வேண்டும். இது ஒன்றும் பண்டிதர்களுடைய மேசையின் மீது வைக்கப்படவேண்டிய காகிதக் கத்தைகள் அல்ல; இந்த நாட்டு மக்களுடைய உள்ளத்துக்கு அறிவிக்கவேண்டிய மிக முக்கியமான விஷயம். இந்த நாட்டு மக்களுக்குத் தெரியாமல் ஒரு 10 பேர் ஒரு அறையிலேகூடி முடிவு செய்கின்ற சாதாரண விஷயமல்ல; இந்த நாட்டிலே இருக்கின்ற ஒவ்வொருவரும் இதிலே தங்களுடைய உணர்வை—தங்களுடைய எண்ணத்தை—தங்களுடைய உள்ளத்தை—தங்களுடைய உரிமையை எடுத்துக் கூறக்கூடிய அவ்வளவு பெரிய முக்கியமான பிரச்சினை—இந்த இந்திப் பிரச்சினையாகும்.

"இன்றையத்தினம், 'இந்தியைக் கொண்டு வருகிறோம்' என்று சொல்லுபவர்கள், ஒவ்வொரு இடத்திலேயும் எப்படி எப்படிப் பேசுகிறார்கள் என்பதைக் கேட்டுக்கொண்டுதானிருக்கிறோம். வேண்டுமானால், அவர்கள் அதிகாரத்திலே இருக்கின்ற காரணத்தாலும், 'சுதந்தரம் வந்ததும் வெள்ளையன் வெளியேறினான்'—என்ற இப்படிப்பட்டக் கோலாகல சந்தோஷ ஆரவாரத்துக்கு மத்தியிலேயும் அவர்கள் அமைத்துக் கொண்ட அரசியல் நிர்ணய சபையிலே நிறைவேற்றிவிட்ட ஒரு சட்டத்தை வைத்துக்கொண்டு, 'அரசியல் சட்டம் அப்படிக் கூறுகிறது; நாங்கள் என்ன செய்வது?'—என்று இன்றையத்தினம் நடிப்பதிலே அவர்கள் வல்லவர்களாக இருக்கலாம்; ஆனால், நமக்கு ஒன்றாகத் தெரிகிறது—'அரசியல் சட்டம் உடைக்கப்படவேண்டிய சட்டம் என்பதுமட்டும் அல்ல; அரசியல் சட்டத்திலே இருக்கின்ற அத்தனை விதிமுறைகளுக்கும் இந்த நாட்டு மக்களுடைய ஒப்பம் கிடையாது; இந்த நாட்டு மக்களினுடைய உரிமை வாடை அதிலே கிடையாது; யாரோ சில பேர், கிடைத்த சந்தர்ப்பத்திலே உருவாக்கிக்கொண்ட சட்டம்'—அது என்று! ஆகவே, அந்த விதிமுறைகளுக்கு நாம் எத்தகைய மதிப்பளிக்கவேண்டுமென்பதையும் நாம் உணருவோம்.

"இந்த நாட்டினுடைய ராஷ்டிரபதியாயிருக்கின்ற பெரியவர், சமீபத்திலே தென்னாட்டிலே வலம்வந்தார்; கேரளத்திற்குச் சென்றார்; சென்னையிலே சில நிமிடங்கள் கழித்தார்; ஒவ்வொரு ஊரிலும் அவருக்குக் கிடைத்த நேரம் சின்ன வாய்ப்பாக இருந்தாலும்—பெரிய வாய்ப்பாயிருந்தாலும் எதைச் சொல்லிவந்தார் என்பதை நம்மால் மறந்துவிட முடியவில்லை. ஒவ்வொரு ஊரிலும் அவர் போய்ச் சொல்லுகிறார்—'இந்தியாவினுடைய ஒற்றுமை நிலைநாட்டப்படவேண்டும்; இந்தியாவினுடைய ஒற்றுமைக்கு ஆபத்துவரா நாம் சகிக்கமாட்டோம்; ஒற்றுமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், பலப்படுத்திக் கொள்வதற்கு மிருக்கின்ற ஒரேவழி, இந்தியை இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்'—என்று!

"இன்னும் ஒருபடி மேலே போய்ச் சொல்லுகிறார்—'இந்தியாவினுடைய தேசிய மொழி இந்திதான்'—என்று, ஒவ்வொரு ஊரிலும் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்.

"ஆனால் பண்டித நேரு அவர்கள், ஓரிரு ஆண்டுகளுக்கு முன்னால் தென்னாட்டில் வலம்வந்தார்; அந்த நேரத்திலே இந்நாட்டு மக்கள் மத்தியிலே அவர் என்ன கூறினார்?—'இந்தி மட்டும்தான் இந்தியாவினுடைய தேசியமொழி என்று சொல்லுவதினாலே பலருடைய உள்ளங்கள் புண்படுவதாக அறிகிறேன்; நான் இப்பொழுது சொல்லுகிறேன்—8-வது ஷெட்யூலிலே இருக்கின்ற 14 மொழிகளுமே இந்தியாவினுடைய தேசிய மொழிகள்தான்; அது மட்டுமல்ல; இந்தியாவிலேயே பேசப்படுகின்ற அத்தனை மொழிகளும் இந்தியாவினுடைய தேசிய மொழிகள்தான்; போதுமா?'—என்று சொல்லிவிட்டுப் போனார்.

"அவர் சொன்னதற்குப்பிறகு, இந்நாட்டு ராஷ்டிரபதி இப்படிச் சொல்லுகிறார்—'இந்தியாவின் தேசிய மொழி இந்தி மட்டும்தான்'—என்று!

"சட்டத்திலே அவர்கள் எழுதியிருப்பது, 'அரசாங்க மொழி' என்பது; ஆனால், சட்டத்தை இந்த நாட்டில் அமுல் நடத்தவேண்டிய பெரும் பொறுப்பிலே இருக்கின்ற அந்தப் பெரியவர், ஊர் பூராவும் சுற்றிச் சுற்றிச் சொல்லுகிறார்—'இந்தி இந்த நாட்டினுடைய தேசியமொழி'—என்று!

இந்த இரண்டு கருத்துக்களுக்குமிடையிலே இருக்கின்ற வேறுபாடுதான், விடுதலைக்கும்—விடுதலையைப் பறிக்க முயலுகின்ற வெறியர்களினுடைய நிலைக்குமிருக்கின்ற வேறுபாடாகும்.

"இன்றையத்தினம் உலகத்திலே நாம் காண்கிறோம்—எத்தனையோ நாடுகளிலே பல மொழிகள் பேசுகின்ற மக்கள் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள்; கனடாவிலிருக்கின்ற மக்கள் ஆங்கிலத்தையும் பேசுகிறார்கள்; பிரெஞ்சு மொழியும் பேசுகிறார்கள்; இரண்டு மொழிகளும் அங்கே, கனடாவினுடைய தேசிய மொழிகள் என்ற உரிமையைப் பெற்றிருக்கின்றன — இரண்டு மொழிகளும், கனடாவினுடைய அரசாங்க மொழிகள் என்ற அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றன.

"அதேபோல், ஐரோப்பாவிலிருக்கின்ற சுவிட்சர்லாந்து நாட்டிலே நாம் காணுகிறோம்; 4 மொழிகளை அந்த நாட்டு மக்கள் பேசுகிறார்கள்—ஜெர்மன் மொழியைப் பேசுகிறார்கள்; இத்தாலி மொழியைப் பேசுகிறார்கள்; ரோமான்ஸ் என்ற மொழியைப் பேசுகிறார்கள்; பிரெஞ்சு மொழியைப் பேசுகிறார்கள்—4 மொழிகளும் சுவிட்சர்லாந்து நாட்டின் தேசிய மொழிகள் என்ற அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றன; இதிலே, அந்தரோமான்ஸ் என்ற மொழிமட்டும் 1,000-க்கு 9 பேர் மட்டுமே பேசுவதினால், அந்த மொழியைத் தவிர, பாக்கி 3 மொழிகளும் சுவிட்சர்லாந்தினுடைய அரசாங்க மொழிகள் என்ற அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றன; அங்கு போடப்படுகின்ற சட்டங்கள், கோர்ட்டு நடவடிக்கைகள், கோர்ட்டுகளிலே வழங்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தானின் புதிய பிரதமர்

ஐ. ஐ. சுந்திரிகர் நியமனம்

கராச்சி, அக். 17—

பாகிஸ்தானின் புதிய பிரதமராக முஸ்லீம்லீக் சட்டசபைக் கட்சித் தலைவர் ஐ. ஐ. சுந்திரிகர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த வெள்ளியன்று பிரதமராயிருந்த சுராவர்த்தி இராஜினாமாச் செய்ததின் விளைவாகவே இவர் புதிய பிரதமராக்கப்பட்டிருக்கிறார்.

இவர் தலைமையில் அமையும் புதிய சர்க்கார், முஸ்லீம் லீக், ரிபப்ளிக்கன், கிரிஷக் சிரமிக், மற்றும் நிஜாமி இஸ்லாம் ஆகிய நான்கு கட்சி உறுப்பினர்களின் கூட்டு சர்க்காராக இருக்கும் என்று தெரியவருகிறது.

சுந்திரிகர் இப்போது, தனது மந்திரிசபையில் இடம்பெறவேண்டியவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

# இந்தித் திணிப்பை எதிர்த்து மாணவர் அணி திரள்கிறது!

## 2,000 அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் வேலைநிறுத்தம்

## சிதம்பரம் வரை ஊர்வலமாகவந்து கண்டனம் முழக்கினர்

அண்ணாமலைநகர், அக். 18—

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் 16—10—57-ல் வகுப்பிற்குச் செல்லாமல் இந்தி எதிர்ப்பு நாள் கொண்டாடினர்.

தி. மு. க.—மாணவர் கிளைத் தோழர்கள் அனைவரும் கூடி நின்று, மாணவர்களை வகுப்பிற்குச் செல்லாதிருக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொண்டார்கள்.

மாணவர்கள் அனைவரும்-இரண்டாயிரம் பேர்கள் தோழர் கணபதி ராமசுப்பையா அவர்கள் தலைமையில் ஊர்வலமாகப் புறப்பட்டு — அண்ணாமலைநகரிலிருந்து காலை 10-30 மணியளவில் பெருமழை பெய்ததையும் பொருட்படுத்தாமல் சிதம்பரத்தை அடைந்தனர்.

அங்கு தோழர்கள் கோபால் பிரதர்ஸ், ஊர்வலத் தலைவருக்கு மலர் மாலை அணிவித்தும், மலர்களைத் தூவியும் வரவேற்றனர்.

தோழர்கள் வேணுகோபால், நகர தி.மு.க. செயலாளர் இரா. சக்கரவர்த்தி ஆகியோர் சுவைநீர் வழங்கினர்.

ஊர்வலம் சிதம்பரம் செங்கழுநீர் பிள்ளையார் கோயில் தெரு வழியாகத் தெற்கு வீதி, மேல வீதி, வடக்கு வீதி, கீழ வீதி, பஸ் ஸ்டாண்டு வழியாகக் குளக்கரையை 1-30 மணிக்கு அடைந்தது; தோழர் கணபதிராமசுப்பையா தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் டி. கே. சுப்பிரமணியம், சாத்தையன் அழகப்பன், அண்ணாமலை ஆகியோர் இந்தித் திணிப்பை வன்மையாகக் கண்டித்துப் பேசினர்.

மத்திய அரசினர் தென்னாட்டின் மீது இந்தியைக் கட்டாயமாகத் திணிப்பதை உடனடியாக திரும்பப் பெறாவிட்டால், மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட நேரிடும் என்றும், நாமும் நமது நாட்டின் நல்வாழ்விற்காக, இந்தி வெறியர்களுக்கு நமது உயிரையும் அர்ப்பணிக்கத் தயங்கமாட்டோம் என்றும் பேசினர்.

ஊர்வலத்தில் சுமார் 200 சைக்கிளில் மாணவர்கள் அணிவகுத்துச் சென்றனர்.

இந்தி எதிர்ப்புத் தட்டிகளையும், வளைவுகளையும் கையில் ஏந்திய வண்ணம் மாணவர் பட்டாளம் எழுப்பிய ஒலிமுழக்கம், இதுவரையில் கண்டும் கேட்டுமிராதத் தன்மையில் சிறப்புமிக்கதாக இருந்தது; 'மெக்கபோன்' மூலம் இந்தியைஎதிர்த்துமுழக்கம் செய்தனர்.

ஊர்வலத்தில் தோழர்கள் வளவன், பொன்-சொக்கலிங்கம் ஆகியோரும் உடன் சென்றனர்.

அந்த இந்தி எதிர்ப்பு நாள் கொண்டாட்டத்தில், தி. மு. கழகத் தலைமைநிலைய அறிக்கைப்படி தீர்மானம் நிறைவேற்றினர்.

# நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 18—10—'57 வெள்ளி


# நியாயமான கேள்வி!

நியாயவிலைக் கடைகள் ஆயிரம் திறந்துவிட்ட காரணத்தினுல், அரிசியின் விலையேற்றம் குறிப்பிடத்தகுந்த அளவிற்குக் குறைந்துவிடவில்லை என்ருலும், கூடுமானவரை தங்கள் வாங்கும் சக்திக்கு ஒத்தவகையில் ஏழை மக்களுக்கு, தரக்குறைவான அரிசியாவது கிடைப்பது சாத்தியமாயிற்று. ஆயிரம் நியாயவிலைக் கடைகள் ஐநூருகக் குறைக்கப்பட்டுவிட்டதின் காரணமாக, ஏழை மக்களுக்குக் கிடைக்கக் கூடிய தரக் குறைவான அரிசிக்கும் இப்பொழுது, எப்பொழுதும்போல் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த நியாயவிலைக் கடைகளை சரிபாதியாகக் குறைத்துவிட்டதின் விளைவாக, தனியார் கடைகளில் விற்கப்படும் அரிசியும் இனி விலையில் கூடிவிடும். இலாப நோக்கத்தின் காரணமாக அரிசியின் விலை கூடுவதோடு, இதுவரை நியாயவிலைக் கடைகளில் அரிசி வாங்கி வந்தவர்களும் இனி தனியார் கடைகளில் வாங்கப்போகும் கட்டாயத்தின் காரணமாக அரிசியின் விலை மேலும் கூடிவிடுவது உண்மையிலும் உண்மையாகும்.

அரிசியின் விலை ஏறுவதற்கான மேற்குறிப்பிட்ட இரண்டு காரணங்களுடன் இப்பொழுது மற்ருெரு காரணமும் கூடியிருக்கிறது. அதாவது, தஞ்சை குறுவை அறுவடைக்குப்பிறகு எதிர்பார்க்கப்பட்டபடி அரிசியின் விலை குறையாது, முன்னிலும் கூடிக்கொண்டே போவது மற்ருெரு காரணமாகும்.

புதிய அறுவடைக்கு முன்னும் பின்னும் சில நாட்கள் வரை அரிசியின் விலை கொஞ்சம் குறைவதுதான் இதுவரை கண்ட உண்மையாகும். ஆனுல், இப்பொழுதோ தஞ்சைகுறுவை அறுவடைக்குப் பிறகு அரிசியின் விலை, அறுவடைக்கு முன்னர் இருந்த நிலையிலேயே இல்லாததுடன், அரிசியின் விலை ஏறிக்கொண்டு போவது வியப்புக்குரியதாகும்.

குறுவை அறுவடைக்குப் பிறகு உருவெடுத்து இருக்கும் அரிசியின் விலையேற்றத்தைக் கண்டு சென்னை அரசாங்கம் திகைக்கிறது. கேரள வியாபாரிகள் ஏராளமாக புதிய குறுவை நெல்லை கொள்முதல் செய்து வருவதின் விளைவாகத்தான், இந்த எதிர்பாராத விலையேற்றம் என்று, அரிசி விலை கூடிவருவதற்குக் காரணமும் காட்டுகிறது சென்னை அரசாங்கம்.

கேரள வியாபாரிகள் அதிக விலை கொடுத்து தஞ்சையின் புதிய குறுவை நெல்லை இப்பொழுதுதான் கொள்முதல் செய்கிருர்கள் என்பதில்லை. நீண்டகாலமாகவே இக்கொள்முதலை அவர்கள் செய்து வருகின்றனர் என்பது வெளிப்படை. அதுவுமன்றி, தமிழகத்தின் நெற்களஞ்சியம் என வழங்கப்படும் தஞ்சையில் மட்டுமல்லாது, தமிழகத்தின் பற்ருக்குறை மாவட்டங்களாக உள்ள செங்கல்பட்டு, வட ஆற்காடுபோன்ற மாவட்டங்களிலும் கூடத்தான் கேரள வியாபாரிகள் அரிசி கொள்முதல் செய்துவருகின்றனர். இந்த உண்மை சென்னை அரசாங்கத்திற்கும் தெரியும்.

அதிக விலை கொடுத்து தமிழகத்திலிருந்து ஏராளமாகக் கொள்முதல் செய்து ஏற்றிக்கொண்டு போகின்ற அரிசியை கேரளத்தில்தான் கேரள வியாபாரிகள் விற்ருகவேண்டும். அதுவும் கொள்முதல் விலையை விடக் கூடுதலான விலைக்குத்தான் கேரளாவில் தமிழக அரிசியை அவர்கள் விற்ருகவேண்டும்.

கேரளத்தில் அரிசியை அதிக விலைக்கு விற்பது என்பது முடியாத காரியம். அதிக விலைக்கு விற்பதற்குச் சட்டப்படி தடை எதுவும் இல்லை என்ருலும், சென்னைபோல் இல்லாது அங்கு ஆயிரக்கணக்கில் அரிசி விற்பனை செய்யும் நியாயவிலைக் கடைகள் இருப்பதால், அரிசியை அதிக விலைக்கு விற்பது என்பது கேரளாவில் முடியாது. அதாவது, குறைந்த விலையில் தேவையான அரிசியை வாங்குவதற்கான வசதியும், வாய்ப்பும் நிரம்ப இருக்கின்றபொழுது, கேரள மக்களில் பெரும்பான்மையினர் அதைப் பயன்படுத்திக் கொள்வதை விடுத்து, தனி நபர்களால் விற்கப்படும் அரிசியைக் கூடுதலான விலை கொடுத்து வாங்குவதில், ஆர்வமோ பரபரப்போ காட்டமாட்டார்கள். குறைந்த எண்ணிக்கையினர் தான் அதிக விலை கொடுத்து, தனி நபர்களிடம் தரமான அரிசியை வாங்க முந்துவர்.

எனவே, இந்தச் சூழ்நிலையில் கேரள வியாபாரிகள் அதிக விலை கொடுத்து தமிழகத்தில் கொள்முதல் செய்யும் அரிசி முழுவதும் கேரளத்திலேயே விற்பனையாகிவிட முடியுமா என்பது ஆராயத்தக்கது.

இந்தப் பிரச்சினை எப்படியோ இருக்கட்டும். இது பற்றிய ஆராய்ச்சியில், அதற்காகப் பொறுப்பும் கடமையும் கொண்டிருக்கின்றவர்கள் ஈடுபடட்டும். நிற்க.

உணவுத் துறையில் தமிழகமே பற்ருக்குறையாக இருக்கின்றபொழுது, தமிழகத்திலும் பற்ருக்குறையாக இருக்கின்ற கேரளத்திற்கு, தமிழகத்திலிருந்து அரிசியைக் கொள்முதல் செய்வது நியாயமாகுமா எனச் சிலர் கேள்வி எழுப்புகின்றனர். அவ்வாறு கொள்முதல் செய்வதையும், வெளியேற்றிச் செல்வதையும் தடுக்க உடனடியாக சென்னை அரசாங்கம் முன்வரவேண்டும் என்று, இப்பிரச்சினைக்கு மாற்றமும் சிலர் உரைக்க முன்வருகின்றனர்.

உணவுத் துறையில் பற்ருக்குறையாக இருந்துவரும் தமிழகத்திலிருந்து, அதனிலும் பற்ருக்குறையாக உள்ள கேரளத்திற்கு, அரிசியைக் கொள்முதல் செய்து கொண்டு போவது நியாயமாகுமா என்ற கேள்வியைக் கேட்பதற்குப் பதிலாக, ஏற்கனவே உணவுத் துறையில் பற்ருக்குறையாக இருந்துவருவதுடன், தனது பற்ருக்குறையை ஈடு செய்துக் கொள்வதற்கே டெல்லியின் கடைவாயிலில் கையேந்திக் கிடக்கும் தமிழகத்தை, தான் அரிசியைக் கொள்முதல் செய்வதின் மூலம் உணவுத் துறையில் மேலும் பற்ருக்குறையுடையதாக்கி, அதன் மக்களை உணவின்றி திண்டாடவைக்கக் கேரளம் எண்ணலாமா—அப்படி எண்ணுவது நியாயமாகுமா என்ற கேள்விகளைக் கேட்க வேண்டும்.

இது நியாயமான கேள்வி. கேரள மக்களில் பொறுப்புள்ள எவரும், இக்கேள்வியை நியாயமற்றது எனக் கூறத் துணியமாட்டார்கள்.

தன்னைப்போன்றே உணவுப் பற்ருக்குறையினுல் அல்லல் பட்டுக்கொண்டிருக்கும் தமிழகத்தை—தன்னைப் போன்றே பேரரசிடம் உணவுக்காக மண்டியிட்டுக்கிடக்கும் தமிழகத்தை—அதற்கு உரிமையுடைய மக்கள், அரைவயிறு கால்வயிருவது உண்ண விடாது, அதன் மண்ணில் உற்பத்தியாகும் உணவுப் பொருள்களை அதிக விலை கொடுத்துக் கொண்டுபோய், பட்டினி போட்டுச் சாகடிக்க வேண்டும் என எவரும் விரும்பார். பொறுப்புள்ள கேரள மக்களும் அத்தீவினையை விரும்பார்.

தமிழகத்தைத் தவிக்கவிட்டு, அத்தவிப்பில் கேரளத்தை வாழ்விக்கவைப்பதை பொறுப்புள்ள கேரளத்தார் எவரும் கருதார். தமிழக மக்களைச் சாகவிட்டு, அந்தச் சாக்காட்டை கேரள மக்களின் உயிர்காப்புக்குரிய கருவியாக்கிக்கொள்ள அறவழி நிற்கும் கேரளர் எவரும் நெஞ்சினுலும் நினைார்.

## உணவு உற்பத்தித் திட்டங்கள்!

### நிறைவேற்றப்படுவதில் பெரும் காலதாமதம்

புதுடில்லி, அக். 16—

இந்திய மாநிலங்களின் விவசாய—உணவு அமைச்சர்கள், நாட்டின் உணவுப் பிரச்சினையைப்பற்றி ஆராய்ந்து, மக்கள் குறைகளைக் களைவதற்கான வழிகளைக் கண்டறியக் கூடினராம். உல்லாசபுரியெனச் சீமான்கள் அழைத்திடும் 'ஸ்ரீநகரில்' மாநாடு நடைபெற்றது.

உணவு உற்பத்தி சம்பந்தமாகப் பல திட்டங்கள் குறித்தபடி அமுல் செய்யப்படவில்லை என்பதை அவர்கள் சுட்டிக்காட்டி, தாமதத்திற்கான காரணங்களைக் கண்டறிய ஒரு நிபுணர் குழு ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய அரசுக்கு சிபாரிசு செய்து கலைந்துவிட்டனராம்!

நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக நிச்சயமற்ற நிலையும், தாமதமும் நீடித்துவருவதால் உற்பத்தி பாதிக்கப்படுகிறதென்றும் ஆகவே, நிலச் சீர்திருத்தச் சட்டங்களைத் துரிதமாக நிறைவேற்றி, இந்த நிச்சயமற்ற நிலையைப் போக்கிட வேண்டுமென்றும் மாநாட்டில் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதாம்.

## சென்னையில் குடும்பக்கட்டுப்பாடு

சென்னை, அக். 16—

நாட்டு மக்கள் நல்வாழ்வுக்கும் பொருளாதாரச் சிக்கனத்திற்கும் குடும்பக் கட்டுப்பாடு அவசியம் என்று சென்னை மாநில அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் திட்டத்தைத் தீவிரப்படுத்தப் போவதாக அமைச்சர் மாணிக்கவேலர் தெரிவித்துள்ளார்.

# 'ஆங்கிலம் அன்னிய மொழி என்ருல் தமிழ்நாட்டிற்கு இந்தி அதைவிட அன்னிய மொழியாயிற்றே!'

## 'ஆட்சிமொழி பற்றிய அரசியல் சட்ட விதியை மாற்றத்தான் வேண்டும்'

## இந்தி ஆதரவாளர் வாதங்களைத் தகர்க்கிருர் எல். கிருஷ்ணசாமி பாரதி

## இதர மொழிகளைப் பயன்படுத்தும் 'இலட்சணம்' அம்பலம்!

### இந்தி இடம் பெற்ற சுவையான வரலாறு

"இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆங்கிலமே தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்ற ராஜாஜியின் கருத்தை, சென்னை மாநிலத்தில் வாழும் கல்வியறிவு பெற்ருேரில் மிகப் பெரும்பாலானுேர் ஆதரிக்கின்றனர்; சென்னை வழக்கறிஞர் சங்கமும் இந்தக் கருத்தை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

"ராஜாஜி தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையிலேயே சென்னையின் எல்லா அரசியல் கட்சியினரும் கருத்தறிவித்துள்ளனர்.

"அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினன் என்ற முறையில் நான், அரசியல் நிர்ணயச் சட்டத்தில் நான் கையொப்பமிட்டிருக்கிறேன் என்பதில் சந்தேகம் இல்லை; ஆனுல் அதேநேரத்தில், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கிருந்த சூழ்நிலைபற்றி மக்கள் மேலும் நன்ருகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

"மொழிப் பிரச்சினைபற்றிப் பல நாட்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தில் காரசாரமாக விவாதிக்கப்பட்டபின் வாக்கெடுப்பு நடைபெற்றபோது, (இந்திக்கு ஆதரவாகவும் எதிராகவும்) ஒரே எண்ணிக்கையான வாக்குகள் கிடைத்தன. தலைவர், கூட்டத்தை ஒத்திவைத்தார். மீண்டும் கூட்டம் நடைபெற்றபோதும் இதே பிளவு இருந்தது; பின்னர், கூட்டத்தின் தலைவர் இந்திக்கு ஆதரவாகத் தமது வாக்கினை அளித்தார்.

"இப்போதைய அரசியல் சட்டத்தின் இந்திபற்றிய விதிக்கு அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தின்போது, கட்சிக் கட்டுப்பாடு காரணமாகத்தான் நாங்கள் எல்லாம், ஆதரவாக வாக்களித்தோம்; ஆனுல் இப்போது, ஒருவர் சுதந்தரமாகத் தனது கருத்தை அறிவிக்கத் தகுந்த சூழ்நிலை உருவாகியிருக்கிறது; எனவே, மாநிலங்களில் வாழும் மக்களின் விருப்பங்களுக்கு ஒப்ப, ஆட்சிமொழி குறித்த முடிவைப் புனராலோசனை செய்து மாற்றவேண்டும் என்று விரும்புகிறேன்"

—இவ்வாறு, மதுரை திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்கள், 'இந்தியன் எகஸ்பிரஸ்' சென்னை 10—10—57-ந் தேதிய இதழில் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிருர்.

இந்திக்கு ஆதரவாக, அந்த இதழில் பேராசிரியர் கே. ஆர். ஆர். சாஸ்திரி என்பார் எழுதிய கடிதத்திற்கு மறுப்புக் கடிதம் எழுதியுள்ள அவர், மேற்கண்டவாறு குறிப்பிட்டுவிட்டு மேலும் கூறுவதாவது:—

(இந்திக்கு ஆதரவு தெரிவித்து) கடிதம் எழுதியிருப்பவர் எழுப்பியுள்ள கேள்விகளுக்கு நான் வரிசைக் கிரமமாகப் பதில் தருகிறேன்:—

(1) 'இந்தியாவின் ஆட்சி மொழியாக, இந்தி, அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது' என்று அவர் கூறுகிருர்; ஆனுல், இதுபோன்ற ஜீவாதாரமான பிரச்சினைகளில், ஒவ்வொரு மாநிலத்திற்கும், 'அந்த முடிவைப் புனராலோசனை செய்து மாற்றவேண்டும்' எனக் கோருவதற்கு உரிமை உண்டு. ஒரு மாநிலத்தின் ஒருமித்த முடிவை அலட்சியம் செய்துவிட்டு அவசர நடவடிக்கைகளில் ஈடுபடுவது, திணிப்பு என்பதைத் தவிர வேறு இல்லை.

(2) ஒரு தலைமுறைக்குப் பிறகு இந்தி ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாகப் பேராசிரியர் கூறுகிருர்; இல்லை என்கிறேன் நான். இந்தியை யூனியன் சர்க்காரின் ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ள தமிழ்நாட்டிற்குப் பல தலைமுறைகள் ஆகும் என்று கூற விரும்புகிறேன்.

(3) பேராசிரியர் சொல்லுவது போல, அன்னிய மொழியான ஆங்கிலத்தை விரும்புவதும் இந்திய மொழியான இந்தியைக் கற்க மறுப்பதும் என்பதும்

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்தத் தடையுத்தரவுக்கு என்ன காரணமோ?

சென்னை, அக. 17—

'அதிர்ஷ்ட தாயத்துக்கள்', 'மந்திரக் கவசம்', 'மாயமோதிரம்' என்று சொல்லப்படும் பொருள்களை இந்தியாவிலிருந்தும், புதுச்சேரி மாநிலத்திலிருந்தும் கடல் வழியாகவோ, தரைவழியாகவோ வெளியே எடுத்துச் செல்லக் கூடாது என்று இந்தியப் பேரரசு தடை விதித்துள்ளது.

## சாலைகளில் பட்டாசு வெடிக்கத் தடை!

ஐதராபாத், அக். 17—

ஐதராபாத், சிகந்தராபாத் ஆகிய நகரப் பகுதிகளிலுள்ள சாலைகளிலும், பொது இடங்களிலும் பட்டாசு போன்ற வெடிகளை வெடிக்கக்கூடாது என்று, ஐதராபாத் போலீசுக் கமிஷனர் உத்தரவிட்டுள்ளார்.

## சென்னை—ஆந்திர எல்லை மாற்றச் சிபாரிசுகள்

### சட்ட மன்றங்கள் விவாதிக்கும்

சென்னை, அக். 16—

படாஸ்கரின் தீர்ப்பை அமுல் நடத்துவதற்கு முன்பு சென்னை—ஆந்திர சட்ட மன்றங்கள், சிபாரிசுகளை விவாதிக்குமாம்.

அடுத்த பாராளுமன்ற கூட்டத்தில்கூடபடாஸ்கர் தீர்ப்பைஅமுல் நடத்தும் சட்டம் வராது என்று தெரியவருகிறது.

1958 எப்ரல்வரை முடிவு காண்பது கடினம் என்று சென்னை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கோவையில் இந்தி எதிர்ப்பு நாள்

## பல்லாயிரம் மக்கள் கொண்ட ஊர்வலமும், பொதுக்கூட்டமும்

## அண்ணா கலந்துகொண்ட நிகழ்ச்சிகள் விவரம்

கோவை, அக். 14—

13—10—57-ல், கோவை நகரம் என்றுமே கண்டிராத காட்சியாக, மக்களின் இந்தி எதிர்ப்புப் போர்க்கோல உணர்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடியது.

காலை 7 மணி முதலே அண்ணா அவர்களின் வருகையை முன்னிட்டு, ஆங்காங்கே ஆவல் ததும்ப கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் அனைவரும் சிறப்புக் கூட்டம் நடைபெறும் சண்முகா தியேட்டரைச் சுற்றிலும் திரண்டு நின்றனர்.

நகரின் முக்கிய வீதிகளில் தோரணங்களும், இந்தி எதிர்ப்பு முழக்கம் வரைந்த வளைவுகளும், திராவிடத்தின் மணிக் கொடிகளும், தமிழ் காத்த தாளமுத்து-நடராசன் புகழ் வாழ்க' என்ற அலங்கார வளைவுகளும், 'அறிஞர் அண்ணாவே வருக, வருக' என்ற வாவேற்பு வளைவுகளும் நிறைந்து, கோவையின் எழிலைப் பன்மடங்கு பெருக்கிக் காட்டின.

9 மணிக்குள்ளாகவே, தியேட்டர் நிறைந்துவிட்டது; சரியாக 12-30 மணிக்கு அண்ணா அவர்கள் தியேட்டருக்குள் நுழைந்தவுடன், மக்களின் ஆரவாரப் பேரொலி தியேட்டரைக் குலுக்கியது.

சிறப்புக் கூட்டத்தில் 'காவிரியும் - கங்கையும்' பற்றி அண்ணா அவர்கள் அரியதோர் உரைநிகழ்த்தினார்கள்.

### ஊர்வலம்

மாலை 4-30 மணிக்கு, கழகக் கட்டிடத் தருகிலுள்ள திடலிலிருந்து, பாண்டு இசைக்குழு முன் செல்ல, இருவண்ணக் கொடி தாங்கிய வேழம் வீரநடைபோட, அதனை அடுத்து குதிரைகள் கம்பீரமாக அணிவகுத்துச் செல்ல, நூற்றுக்கணக்கான சைக்கிள்களும், பல்லாயிரக்கணக்கான மக்களும் இந்தி எதிர்புப் பேரொலி எழுப்பிய வண்ணம் முக்கிய வீதிகள் வழியாகச் சென்றனர்.

இம்மாபெரும் ஊர்வலம் ரெங்கே கவுடர் வீதி, ராஜவீதி, கருப்பகவுண்டர் வீதி, வைசியாள் வீதி, பெரியகடை வீதி, ஸ்டேட் பாங்க் ரோடு, அவினாசி ரோடு வழியாகச் சென்று சிதம்பரம் பூங்காவில் நிறைந்திருந்த மக்கள் வெள்ளத்தில் கலந்தது.

நகரத்தின் சுற்றுப்புறக் கிளைகளிலிருந்து வட்டார ஊர்வலங்களும், கிராம ஊர்வலங்களும், இம்மாபெரும் ஊர்வலத்தோடு கலந்த காட்சி கோவை மக்களை உணர்ச்சிக்கடலில் ஆழ்த்திற்று.

### பொதுக்கூட்டம்

சிதம்பரம் பூங்கா மைதானம் இலட்சக்கணக்கான மக்களைத் தாங்கி, இந்தி எதிர்ப்புக்குக் கோவை மக்களின் ஒருமித்த ஆதரவை தெற்றெனக் காட்டிற்று.

சுமார் 7 மணியளவில் அண்ணா அவர்கள், மக்களின் ஆரவாரப் பேரொலிக்கிடையே மேடைக்கு வந்தார்.

பின்னர் நகரக் கழகத் துணைச் செயலாளர் வெ. கிருட்டினமூர்த்தி, வந்திருந்த மக்களை வரவேற்று, நகரக் கழகச் செயலாளர் தோழர் இராசமாணிக்கம் அவர்களைத் தலைமை தாங்கிக் கூட்டத்தை நடத்தித் தருமாறு கேட்டுக்கொண்டார். தோழர் செழியன் வழிமொழிந்தார்.

தலைமையுரைக்குப் பின்னர், அண்ணா அவர்களுக்குப் பல்வேறு அமைப்புகளிலிருந்து மாலைகளும், கைத்தறி ஆடைகளும், இன்னபிற அன்பளிப்புகளும் குவிந்தன.

நகர தி. மு. கழகம், நீலகிரி தோட்டத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், வசந்தா மில் தொழிலாளர்கள் சங்கம், சோமசுந்தரம் அச்சகத் தோழர்கள், ஒண்டிபுதூர் அண்ணா படிப்பகம், சோமசுந்தரா மில்ஸ் தொழிலாளர்கள், சோமசுந்தரா மில்ஸ் ஸ்டோர் தொழிலாளர்கள், ஸ்டேன்ஸ் யுனைடெட் காபிசப்ளை குமாஸ்தா — தொழிலாளர்கள், முத்தமிழ் நூலகம்—உடையாம்பாளையம், 19-வது வார்டு அனுதாபிகள், வ. உ. சி. படிப்பகம்—சிரணயக்கன்பாளையம், செல்வபுரம் தி.மு.க., 14-வது வட்டார தி.மு.க., மூங்கில் தொழிலாளர் சங்கம், உதயசூரியன் படிப்பகம், பாப்பநாய்க்கன்புதூர் தி.மு.க., பி. எஸ். ஜி. தொழிலாளர்கள், ஸ்டேன்ஸ் மில் தொழிலாளர்கள், புதுமலர்ச்சி படிப்பகம், வடவள்ளி தி.மு.க., முத்தமிழ் மறுமலர்ச்சி மன்றம்—27-வது வட்டாரம், தெண்டாயுதபாணி பவுண்டரி தொழிலாளர்கள், முத்தமிழ் மறுமலர்ச்சி மன்ற இரவுப் பாடசாலை, வெள்ளலூர் மறுமலர்ச்சி மன்றம், தி.மு.க.—வெள்ளலூர், தி.மு.க.—ஆலாந்துறை, கே. வி. கே. சாமி படிப்பகம்—12-வது வட்டாரம், தி.மு.க.—மதுக்கரை, தி.மு.க.—துடியலூர், பங்கஜா மில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், 17-வது வட்டார மஜீத் நினைவு மன்றம், 13-வது வட்டார தி.மு.க., இளைஞர் படிப்பகம்—சித்தநாயக்கன்பாளையம், கோட்டை தி.மு.க., நம்பியழகன்பாளையம் தி.மு.க. தோழர்கள், கணபதி டெக்ஸ்டைல் தொழிலாளர்கள், இருகூர் தி.மு.க., 5-வது வட்டத் தி.மு.க., அண்ணா அறிவகம்—குறிச்சி, 10-வது வட்டத் தி.மு.க., திருநெல்வேலி கொங்கராயர் குறிச்சி, காளீசுவரர் மில் தொழிலாளர்கள், பீளமேடு இராதாகிருஷ்ணா மில் தொழிலாளர்கள், தி.மு.க.—இடையபாளையம், கைக்கொடை பீடித் தொழிலாளர்கள், முருகன் மில் தொழிலாளர்கள், கோயமுத்தூர் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில் தொழிலாளர்கள், கோவை ஸ்டீல் டிராங்க் தொழிலாளர்கள், தி.மு.க.—23-வது வட்டாரம், தி.மு.க.—மாச்சம்பாளையம், அழகிரி நினைவுப் படிப்பகம், தி.மு.க.-குனியமுத்தூர், இலட்சுமி மில் தொழிலாளர்கள், தி.மு.க.—நஞ்சுண்டாபுரம், தி.மு.க.—சோமனூர், தி.மு.க.—25-வது வட்டாரம், கே. வி. கே. சாமி மன்றம்—சுந்தராபுரம், புரூக் பாண்ட் தொழிலாளர்கள், நீலகிரி மாணவர் மன்றம், 14-வது வார்டு நெசவுத் தொழிலாளர்கள், தி.மு.க.—15, 16-வது வட்டாரம் தி.மு.க.—26-வது வட்டாரம் ஒண்டிபுதூர் கிளை டெக்ஸ்டைல் தொழிலாளர்கள், திரு. வி. க. படிப்பகம்—வேலாண்டிபாளையம் — தி.மு.க. காந்திபுரம், நண்பர்கள் படிப்பகம்—7-வது வட்டாரம், வள்ளுவர் படிப்பகம்—சிரனத்தம், தி.மு.க.—வெற்றிலைக்காளி பாளையம், வேடப்பட்டி டெக்ஸ்டைல் தொழிலாளர்கள், புலியகுளம் தி.மு.க., திரு. வி. க. படிப்பகம்—29-வது வட்டாரம், தி. மு. க.—கள்ளிமடை, வளர்மதி நாடக மன்றம்—வடகோவை, என். எஸ். கே. நினைவுப் படிப்பகம்—குமாரபுரம், திரு. வி. க. படிப்பகம்—கணபதி, தி. மு. க.—கணபதி, அ. மா. இராசு, பி. இராசமாணிக்கம், ஏ. சாரங்கபாணி, இப்ராகிம் சேட் அண்ட் சன்ஸ், திருமலைசாமி, இராதாகிருஷ்ணன் ஆகிய அமைப்புகளும், தனிப்பட்டவர்களும் அண்ணா அவர்களிடம் மாலைகளையும், கைத்தறி ஆடைகளையும், வெள்ளிக்கோப்பை, இன்னபிற அன்பளிப்புக்களையும், பன்மொழிப் புலவர் அப்பாதுரை அவர்கள் நிதிக்கும், சேலம் தேர்தல் வழக்கு நிதிக்கும், 'ஹோம் லேண்ட்' வளர்ச்சி நிதிக்கும், தலைமை நிலைய நிதிக்கும் நிதி அளித்தனர். (விபரம் தனியாக வெளிவரும்.)

பின்னர், அண்ணா அவர்கள் சுமார் $1\frac{1}{2}$ மணி நேரம் சொற்பொழிவாற்றினர். (பேச்சு பின்னர் வெளிவரும்) (ந-நி.)

# திருச்சி பீடி, சுருட்டுத் தொழிலாளர் மாநாடு

திருச்சி, அக். 15—

13—10—57 காலை 9 மணிக்கு திருச்சி பீடி, சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் முதலாவது மாநாடு தேவர் மன்றத்தில் திரு. எம். கே. எம். அப்துல் சலாம் எம். பி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

காலை 8 மணிக்கு சவுக் மைதானத்திலிருந்து தொழிலாளர்கள் அனைவரும் ஊர்வலமாகப் புறப்பட்டு வந்தனர்.

மாநாட்டை சேலம் சிற்றுளி சுப்பிரமணியம் திறந்துவைத்தார்; எஸ். ஏ. ஜி. ராபி கொடியேற்றி வைத்தார்; செயலாளர் எம். எஸ். மணி எல்லோரையும் வரவேற்றுப் பேசினர்.

தோழர்கள் மு. கருணாநிதி எம். எல். ஏ., பி. ஆர். ராமசாமி, எஸ். ஜி. கிருஷ்ணன், ஐ. எம். ஷரீப் மேலூர் தோழியர் தேசியமணி ஆகியோர் பீடி—சுருட்டுத் தொழிலாளர்களின் பிரச்சினை குறித்துப் பேசினர்; பின் தீர்மானங்கள் நிறைவேறின.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்தும், பீடித் தொழிலில் நடைபெற்றுவரும் பிராஞ்சு முறைகளை ஒழித்து பாக்டரி சட்டத்தின்கீழ் கொண்டுவர வேண்டுமென்றும் அவர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்ய அரசாங்கம் கமிட்டி நியமித்து விசாரிக்க வேண்டுமென்றும், பிராவிடண்டு பண்டு வசதியளிக்கவும், அதைக கண்காணிக்க தனி அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டுமென்றும், பீடித் தொழிலாளர்களுக்கு பாது காப்புச் சட்டம் உருவாக்குகிற கமிட்டியில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், பீடி, இலை, புகையிலை ஆகியவைகளை குறைந்த விலையில் விற்பனை செய்ய கூட்டுறவு விற்பனை நிலயங்கள் திறக்க வேண்டுமென்றும், மேற்படி தொழிலைத் தேசீயமயமாக்க அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ந—நி)

# செங்கற்பட்டு தி.மு.க. பொதுக்கூட்டம்

## அண்ணா கலந்துகொண்டார்

6—10—57 மாலை 6 மணிக்கு செங்கற்பட்டு தி. மு. கழகத்தின் சார்பில் தர்க்கா திடலில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் வை. ரங்கநாதன் தலைமையில் நடைபெற்றது.

தோழர் ஜே. ஏ. வகாப், மற்றும் தோழர்கள் சோ. கா. சுந்தரேசன் வெங்கடாச்சலம் பாலு, தசரதன் ஆகியோர் பேசிய பின, தோழர் ப. உ. சண்முகம் எம். எல். ஏ. அவர்கள் சட்டசபை நடவடிக்கை குறித்து விளக்கினர்.

பின்னர், அண்ணா அவர்கள் பேச எழுந்தவுடன் பல சங்கங்களின் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன. அண்ணா அவர்கள் கழகத்தின் கொள்கைகளையும், சட்டசபை நிகழ்ச்சிகளையும் விளக்கிப் பேசியபின் கழகச் செயலாளர் செ. கோ. விசுவநாதன் நன்றி கூறினர்.

கூட்டம் முடிந்தவுடன் வழக்கறிஞர்கள் வ. செல்வராசு, தசரதராசன் அவர்கள் இல்லத்தில் சிற்றுண்டி விருந்து நடைபெற்றது.

# திருவல்லிக்கேணி நடராஜா கல்விக் கழகத்தில் அண்ணா படத்திறப்புவிழா

## கா. அப்பாதுரையார் தலைமையில் அருணகிரி அடிகள் பாராட்டுரை

சென்னை, அக். 9—

சென்னை திருவல்லிக்கேணி நடராஜா கல்விக் கழகத்தில் அண்ணா அவர்களின் உருவப் படம், கடந்த 8—10—57 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த விழா, அன்று மாலை 6-30 மணியளவில், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் தலைமையில் நடைபெற்றது.

அண்ணா அவர்களின் உருவப் படத்தை அருணகிரி அடிகள் திறந்துவைத்து, தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் அண்ணா அவர்கள் செய்துள்ள சேவை மகத்தானது என்பதை விளக்கியதோடு, அண்ணா அவர்களிடமிருந்துதான் நாடு இன்னும் பல அரிய தொண்டுகளை எதிர்பார்க்கிறது என்றும் குறிப்பிட்டார்கள்.

அடிகள் மேலும் பேசுகையில், தமிழ்நாட்டிற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க மறுக்கும் மாநில ஆட்சியாளர் போக்கினையும், இந்தியைத் திணிக்கும் வடவரின் போக்கையும் வன்மையாகக் கண்டித்தார்கள்.

இறுதியாக நடிகமணி டி. வி. நாராயணசாமி அவர்கள், நடராஜா கல்விக் கழகத்தாரின் பொதுநோக்கினைப் பாராட்டியும், அண்ணா அவர்களின் தலைமையில் தமிழ்நாடு பெற்றுவரும் முன்னேற்றம் குறித்தும் விளக்கி, அரியதோர் கருத்துரை ஆற்றினர்கள்.

தலைவர் முடிவுரையுடன் நன்றி நவிலப்பட்டு விழா இனிது முடிவுற்றது. (ந—நி)

# நன்றி அறிவிப்பு

13—10—57-ம் நாள் காலை தி. மு. கழகக் கிளைகள்—துணை அமைப்புகளைச் சேர்ந்த சேர்ந்த தோழர்கள் அனைவரும் தங்களுக்கேற்ற வகையில், வட்டம் முழுமையும் ஊர்வலங்கள் மூலமும் சுவரொட்டிகள் மூலமும் பொதுமக்களுக்கு இந்தித் திணிப்பின் தன்மையையும், விளைய இருக்கும்—விளைந்துள்ள கேடுகளையும் விளக்கி சீரும் சிறப்புடன் இந்தி 'எதிர்ப்பு நாள்' கொண்டாடியமைக்கும், அன்று பிற்பகல் மாவட்டக் கழகத்தின் சார்பில் தாளமுத்து-நடராசன் கல்லறையிலிருந்து சென்னையின் முக்கிய தெருக்களில் வலம் வந்த ஊர்வலத்தைத் தலைமையேற்று நடத்தித் தந்த தோழர் கே. கோவிந்தசாமி அவர்களுக்கும், பொதுமக்களும்—குறிப்பாக மத்திய, மாநில அரசினரும் தி. மு. கழகத்தின் வலிவையும் பொலிவையும் உணரும் வண்ணம் $1\frac{1}{2}$ மைல் நீளமுள்ள ஊர்வலத்தில் கலந்துகொண்டு சிறப்பித்த கிளைக் கழக, துணை அமைப்புகளின் தோழர்களுக்கும், தொழிலாளர்கள், மாணவர்கள், தாய்மார்களுக்கும், ஊர்வலத்தின் சிறப்பிற்கு ஒருபடியாக, சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் வேடமிட்டு போர்முரசு கொட்டிவந்த 4-வது வட்ட இளைஞர் முன்னேற்ற மன்றத்தாருக்கும், தாளமுத்து-நடராசன் கல்லறையைச் சுத்தம்செய்து வண்ணம் தீட்டிவைத்த 7-வது வட்ட அழகிரி மன்றத்தாருக்கும்—மாலை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிச் சிறப்பித்த தோழர் ஈ. வெ. கி. சம்பத் எம். பி. அவர்களுக்கும், மேடைஅமைப்புகளை உடனிருந்து கவனித்த 42-வது வட்ட தி. மு. கழகத்தினருக்கும், ஒளி, ஒலி அமைப்புகளைச் சிறப்புடன் அமைத்த பாரதி சவுண்ட் சர்வீசாருக்கும் இயக்கப் பண்பாடிய சேலம் சீனிவாசனுக்கும் இயன்ற ஒத்துழைப்பு—உதவிகளைத் தந்த கிளைக் கழகத் தோழர்களுக்கும், சென்னை மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில் என் இதயங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,

**கோ. செங்குட்டுவன்**

மாவட்டத் துணைச் செயலாளன்
தி. மு. க.-சென்னை

# கோதுமை உற்பத்தியில் முதலிடம்!

## ரஷ்யா பெறுவதாகத் தகவல்

லண்டன், அக். 15—

ரஷ்யா இப்போது கனடாவையும், அமெரிக்காவையும், கோதுமை உற்பத்தியில் மிஞ்சிவிட்டதாகவும், உலகில் இப்போது முதலிடம் பெறுவதாகவும் மாஸ்கோ வானொலி தெரிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

# நடராசன்—கிருஷ்ணம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம்

உடுமலை வட்டம் புக்குளம் கிராமம் தி. மு. க. செயலாளர் நாடராசன் அவர்கள், தோழியர் கிருஷ்ணம்மாள் அவர்களைக் கடந்த 3—7—57 அன்று வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டபோது, மணமக்கள் சார்பாக ரூ. 5-ம், தோழர் சண்முகம் சார்பாக ரூ. 5-ம் ஆக ரூ. 10-ம் 'நம் நாடு' வளர்ச்சிக்குத் தரப்பட்டது— வரப்பெற்றோம்— நன்றி—பொறுப்பாளர்.

## அன்பளிப்பு

அனகாபுத்தூர் தி. மு. க. தோழர் எம். வரதன் அவர்களின் துணைவியார் தோழியர் கண்ணம்மாளுக்கு 16—9—57-ல் பிறந்த பெண் மகவுக்கு 24—9—57-ல் 'தமிழ்ச்செல்வி' என்று தோழர் டி. எம். கணபதி அவர்களால் பெயரிடப்பட்டது. தோழர்கள் இராமலிங்கம், டி. தண்டபாணி, ஆகியோர் குழந்தைக்கு வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

## மறைவு

30—9—57-ல் சேலம் 27-வது வட்ட தி. மு. க. துணைச் செயலாளர் கு. மு. கோபால் அவர்களின் தந்தையும்—கழகத்தின் பால் நீங்காப்பற்றுதல் கொண்டவரும்—கழக நிதிக்குத் தாராளமாகக் கொடுத்து வருமான திரு. கு. முனுசாமி (பிள்ளை) அவர்கள் இயற்கை எய்தினர்; மறுநாள் மாலை அவருடைய தோட்டத்தில் சவ அடக்கம் நடைபெற்றது; கழக உறுப்பினர்கள் கலந்துகொண்டு கழகச் சார்பில் மாலை அணிவித்து இறுதி மரியாதை செலுத்தினர்.

# 'நம் நாடு' இதழ் விற்பனையாளர் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம்நாடு' இதழை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை; கீழ்க்கண்டவர்களுக்கு விண்ணபித்துக் கொள்க:—

பூதலூர்
திண்ணனூர்
கல்லிடைக்குறிச்சி
இராஜசிங்கமங்கலம்
பேலூர் (சேலம் மாவட்டம்)
ஆலமரத்துப்பட்டி (கரூர் வட்டம்)
பாகசாலை (மாயூரம் வட்டம்)
சத்திரப்பட்டி

—நிர்வாகி: 'நம் நாடு'

## பம்பாய் தி. மு. கழக மத்தியக் குழுக் கூட்டம்

"20—10—57 மாலை 6 மணிக்கு தாராவி 'திராவிடரகத்'தில் மேற்படி கூட்டம் நடைபெறும்; அதுபோது, மத்தியக் குழு உறுப்பினர்களும் கிளைக் கழகச் செயலாளர்களும் தவறாது குறித்த நேரத்தில் வருகை தருமாறு வேண்டுகிறேன்" என்று, பம்பாய் தி. மு. கழக மத்தியக் குழுச் செயலாளர் எஸ். தியாகராசன் அறிவிக்கிறார்.

## மாணவர் மன்றப் போட்டிகள்

சென்னை மாணவர் மன்றச் சார்பில் வழக்கம்போல் இவ்வாண்டும் கல்லூரி மாணவர்களுக்கு, கதை—கட்டுரை—கவிதை—ஓவியப் போட்டிகளும், உயர்நிலை—நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு கதை—கட்டுரை—கையெழுத்து—ஓவியப் போட்டிகளும் நடைபெறும். மாணவர்கள் தங்கள் இருப்பிடங்களிலிருந்தே போட்டிக்குரிய கதை, கட்டுரை முதலியவைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டும்.

கட்டணமும், விண்ணப்பமும் அனுப்பிவைக்கவேண்டிய இறுதி நாள் 21—10—57 ஆகும்.

விவரம் வேண்டுவோர் :— '17, இரத்தினவேலு முதலி தெரு, சென்னை-1'—என்ற முகவரிக்கு எழுதுக.

## வேதநாயகம் பிள்ளை நினைவு நாள்

சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை மணவழகர் மன்ற—நக்கீரர் பட்டி மன்றச் சார்பில், 19—10—57 மாலை 6-30 மணி அளவில், மன்ற நிலையத்தில் (எண்-2, முருகேச முதலித் தெரு), தோழியர் அமுதா தலைமையில் மேற்படி நினைவு நாள் நடைபெறும்; தோழியர்கள் வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார், கமலா-பாலசுந்தரம், அனுசுயா-மோகனசுந்தரம் ஆகியோர் பேசுவர்.

## இந்தி எதிர்ப்புக் கூட்டம்

காட்டுமன்னார்குடி சத்திய வாணிமுத்து சொற்பயிற்சி மன்றத்தில் 20—10—57 மாலை 6 மணிக்கு, விருத்தாசலம் தோழர் எம். செல்வராசு எம்.எல்.ஏ. அவர்கள் முன்னிலையில், இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெறும்.

## சேலம் மாவட்ட பஞ்சாயத்துக்கள்மாநாடு

அக். 19, 20 தேதிகளில், சேலம், குலமங்கலத்தில், சேலம் மாவட்ட பஞ்சாயத்துக்களின் மாநாடு, நடைபெறும். திரு. கே. இராசாராம் நாயுடு தலைமையில் அமைச்சர் லூர்து அம்மையார் மாநாட்டைத் திறந்துவைப்பார்.

## 'மணிமகுடம்' — நாடகம்

19—10—57 இரவு 9 மணிக்கு இராசிபுரம்—மேட்டுக்காடு கிராமத்தில், தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ. அவர்கள் தலைமையில், உதயசூரியன் நாடக மன்றத்தார் நடிக்கும் 'மணிமகுடம்' நாடகம் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★

வெளிவந்துவிட்டது !

தோழர் டி. கே. சீனிவாசன் எழுதிய

'குறள் கொடுத்த குரல்'

விலை ரூ. 1—00

உங்கள் தேவைக்கு :—

சாந்தி நூலகம், 2/122; பிராட்வே, சென்னை-1.

★★★★★★★★★★★★★★★★★

## கழகக் கூட்டங்கள்

★

**சென்னை— நம்மாள்வார்பேட்டை :**
(புரசைவாக்கத்திற்கு அருகில்)
18—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : கே. பழநீ
பேசுவோர் :
கண்ணதாசன்
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.
வி. எஸ். கோவிந்தராசன்
கருணாகரன்

★

**இளையாங்குடி :**
சாலை நகரில்
19—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : எஸ். எம். பாவா
பேசுவோர் :
மு. கருணாநிதி
ஆர். எஸ். பாண்டியன்
எஸ். எஸ். தென்னரசு

★

**திருப்பத்தூர் :**
(இராமநாதபுரம்)
19—10—57 இரவு 10மணிக்கு
பேசுவோர் :
மு. கருணாநிதி
ஆர். எஸ். பாண்டியன்
எஸ். எஸ். தென்னரசு

★

**கரந்தை—தஞ்சை :**
கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அருகில்
20—10—57 மாலை 6 மணிக்கு
பேசுபவர் :
ஏ.வி.பி.ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.

★

**திருப்பூர் :**
நொய்யல் நதியில்
20—10—57 மாலை 5 மணிக்கு
பேசுபவர்: சி. பி. சிற்றரசு

காலை 10-மணியளவில் 1, 2, 3, 4-வது வட்டாரத்தில் தோழர் சிற்றரசு அவர்கள் கொடியேற்றுவார் ; மாலை 5-மணிக்கு டி. என். கணேசன் இன்னிசை வழங்குவார் ; பொதுக்கூட்டத்தில், கா. அப்பாதுரையார் மணிவிழாவிற்கு நிதி அளிப்போர், தோழர் சிற்றரசு முன்னிலையில் தருமாறு கோரப்படுகின்றனர்.

★

**புதுவை :**
தி. மு. க. ஆண்டு விழா
செஞ்சிச் சாலைத் திடலில்
20—10—57 மாலை 6½மணிக்கு
தலைவர் : ச. சிவப்பிரகாசம்
பேசுவோர் :
கி. மனோகரன்
இரே. இளம்வழுதி

★

**சின்ன எழாச்சேரி :**
தி. மு. கழக 5-வது ஆண்டு விழா
21—10—57 மாலை 6 மணிககு
தலைவர்: கே. வரதன்
பேசுவோர் :
அண்ணு
சி. வி. எம். அண்ணாமலை
மா. கி. தசரதன்

தோழர் கா. வே. முருகேசன் இன்னிசை வழங்குவார் ; இரவு 10-மணிக்கு நாடகம் நடைபெறும்.

★

**திண்டிவனம் :**
காந்தித் திடலில்
21—10—57 மாலை 6½மணிக்கு
தலைவர் : வே. ஆறுமுகம்
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
எஸ். நடராசன்
எஸ். பக்கிரிசாமி

## ஆரம்ப ஆசிரியர் சங்கத் துவக்கவிழா

19—10—57 காலை 9-மணிக்கு, சென்னை—இராயபுரம் வட்டம், தண்டையார்பேட்டைத்தொகுதி ஆரம்ப ஆசிரியர் சங்கத் துவக்க விழா, கணபதி உயர்தர ஆரம்பப் பாடசாலையில், திரு. ஜே. ஐசக் ஆல்பர்ட் தலைமையில் நடைபெறும்; திரு. சி. பத்மநாபன் விழாவைத் துவக்கிவைப்பார்.

# இந்தி ஆதரவாளர் வாதங்கள் தகர்கிறது!

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

என்ற பிரச்சினை அல்ல, அது ; நேரம், உழைப்பு, சௌகரியம் இவை பாழாகாமல், திறமையான நிர்வாகம் என்ற கண்ணோட்டத்தில் எழுப்பப்படும் நடைமுறையைப் பொறுத்த ஒரு எளிய பிரச்சினைதான் அது. மாநிலங்களில் பிரதேச மொழிகள் ஆட்சி மொழிகளாக ஆகிவிட்டன — வந்துகொண்டிருக்கின்றன.

(4) மாநிலங்களுடன் கடிதத் தொடர்பு என்ற ஒரே காரியத்திற்கு மட்டும்தான் யூனியன் ஆட்சி மொழி. உயர்ந்த தரமும், திறமும் பெற்றிருக்கிற மொழியான ஆங்கிலத்தையே தொடர்ந்து நீடிப்பதானது, நிர்வாகத் துறையில் குழப்பத்தையும் ஒழுங்கீனங்களையும் மட்டுமே கொண்டுவரக்கூடிய, 'குழந்தைப் பிராய'த்திலிருக்கும் ஒரு மொழியை—இந்தியைப் புகுத்துவதைவிட நல்லதல்லவா ?

(5) இந்தியில் புதிய சொற்கோர்வை தயாரிப்பதற்காக, எல்லாப் பிரதேச மொழிகளையும் மட்டுமின்றி ஆங்கிலத்தையும் பயன்படுத்த முயற்சிக்கப்படுவதாகப் பேராசிரியர் கூறுகிறார். பயன்படுத்த முயற்சிக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை; ஆனல், பேராசிரியர் கருதும் பொருளில் அல்ல! அகில இந்திய மொழி வல்லுனர்கள் மாநாட்டிற்கு எனது கெழுதகை நண்பர் பேராசிரியர் சேதுப்பிள்ளையுடன் தமிழ் மொழிப் பிரதிநிதியாகச் சென்றிருந்தேன் ; அப்போது, பிறமொழிகளையும் பயன்படுத்தும் 'இலட்சணம்'பற்றித் தெரிந்துகொண்டேன்.

அரசியல் சட்டத்தில் உள்ள ஆங்கிலச் சொற்களுக்கான மொழிபெயர்ப்பாக சுமார் 1,100 தமிழ்ச் சொற்களை சென்னை சர்க்கார் மொழிபெயர்ப்பாளர்கள் தந்திருந்தனர்; ஆனல் அந்த மாநாட்டினர் ஒரே ஒரு சொல்லை மட்டுமே ஏற்றுக்கொண்டனர்; அதுவும்கூட பின்னர், உபயோகிக்கப்படவில்லை. இதுதான் பிறமொழிகளைப் பயன்படுத்தும் இலட்சணம் !

இராஜாஜி அவர்கள், இந்த ஆட்சி மொழி விவகாரத்தில் ஒவ்வொரு மாநிலத்திற்கும், ரத்து அதிகார உரிமை வேண்டுமென்று கருத்தறிவித்திருக்கிறார்கள் ; இதை நான் முழுவதும் ஒப்புக்கொள்கிறேன். இதனல், ரத்து அதிகார உரிமை பிரயோகிக்கும் மாநிலங்கள், 1965-க்குப் பின்னும் இப்போதுபோலவே தொடர்ந்து ஆங்கிலத்தை வைத்துக்கொள்ளலாம்; இதர மாநிலங்கள் இந்தியை வைத்துக்கொள்ளலாம்; அதாவது, மத்திய சர்க்கார்-யூனியன் சர்க்கார், ஆங்கிலம்—இந்தி என்ற இரண்டு ஆட்சி மொழிகளையுடையதாக இருக்கும். சுவிட்சர்லாந்து நாட்டில் மூன்று ஆட்சி மொழிகள் இருக்க முடியுமானல், இங்கு—இந்தியாவில் இரண்டு மொழிகள் ஏன் இருக்கக்கூடாது?

ஆங்கிலம் வேண்டும் என்பவர்களை தேச விரோதிகள் எனக் கூறுவது எவ்வளவு நகைப்பிற்கிடமானதோ, அவ்வளவுக்கு அபத்தமானதும்கூட !

இராஜாஜி, ஒரு உலக மொழியை, இருக்க வேண்டுமென்கிறார். அப்படிப்பட்டவர், ஒரு சர்வதேசவாதியா அல்லது தேச விரோதியா—அல்லது குறுகிய புத்தி படைத்தவரா ?

இந்தியை ஒரு தேசிய மொழியாக எந்த இடத்திலும் அரசியல் சட்டம் அங்கீகரிக்கவில்லை என்பதால், அது இந்தியாவின் ஆட்சி மொழியாவது பற்றித்தான் எங்கள் கவலை. இந்தி, 14 தேசிய மொழிகளுள் ஒன்று; அவ்வளவுதான்.

(1) ஆங்கிலம், நெடுநாட்களாக மாநிலங்களிலும், மத்திய சர்க்காரிலும் ஆட்சி மொழியாக இருந்திருக்கிறது ;

(2) உயர்ந்த நிர்வாகத் திறனை அது பெற்றிருக்கிறது ;

(3) இப்போது அதனை மத்திய சர்க்கார் ஆட்சிமொழியாக மட்டுமே நீடிக்க விரும்புகிறோம் ;

(4) அது ஒரு சர்வதேச மொழி என்பதால், உயர விரும்பும் இந்தியாவிற்கு அது ஒரு மிகுந்த உபயோகமுள்ளதாக இருக்கும்—என்பனபோன்ற காரணங்கள் ஆங்கிலம் இருக்க வேண்டுமென்பதற்கு ஆதாரமாகும்.

ஆங்கிலத்தை ஒரு அன்னிய மொழி எனக் கூறுவது நாகரீக உள்ளத்தின் கண்ணோட்டமாக இருக்க முடியாது.

ஒன்று, அன்னியம் என்ற ஒரே காரணத்திற்காக, எதையும் நிராகரிக்கத் தேவை இல்லை.

அந்தக் காரணப்படி பார்த்தால், ஆங்கிலத்தைவிட தமிழ் நாட்டிற்கு இந்தியே மிகுந்த அன்னிய மொழியாகக் கருதப்படும்."

# தோழர் ஈ.வெ.கி. சம்பத் நிலை விளக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்ற தீர்ப்புகள் அனைத்தும், அந்த 3 அரசாங்க மொழிகளிலேயும் ஒரேசமயத்தில் வந்து தீர வேண்டும். சுவிட்சர்லாந்து நாட்டின் மக்கள் சபையில் பேசுகின்ற உறுப்பினர்கள், 4 மொழிகளில் எந்த மொழியில் வேண்டுமானலும் பேசலாம் ; பேசப்படுகின்ற எந்தப் பேச்சையும், எந்த ஒரு மொழியிலேயும் திருப்பிக் கேட்கலாம், மொழி பெயர்ப்பாளரிடத்திலே! அந்த உரிமைகள் அந்த நாட்டிலே வழங்கியிருக்கிறார்கள் என்றால், என்ன பொருள் ?

"இன்றையத்தினம் இவ்வளவு பெரிய நாடு, இமாலயத்தின் அடிவாரத்திலிருந்து கன்னிபாகுமரி நுனிவரையிலே 36 கோடி மக்களும் அண்ணன்—தம்பிகள் என்று பேசிக்கொண்டிருக்கின்ற இந்த அசகாயசூரர்கள், 'எங்களுடைய மொழி மட்டும்தான் தேசிய மொழி' என்று சொல்லுகிறார்கள் என்றால், அவர்களுடைய மண்டைக்கனத்தை எத்தனை நாளைக்கு நாம் அனுபவிப்பது என்ற கேள்வி இன்று இரவு, தமிழ்நாடு முழுதும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

"இதற்கு ஒரு முடிவு கட்டித் தீரவேண்டுமென்று விடுதலை வீரர்கள் எண்ணுவதிலே எந்தவிதத் தவறும் இருக்க முடியாது.

"ஏன், அந்த நாட்டவர்களெல்லாம் என்ன—பைத்தியக்காரர்களா ? அவர்களெல்லாம் என்ன—நம்மைவிட அரசியல் ஜனநாயகம் அறியாதவர்களா ? அவர்கள் என்ன—நம்மைவிட உரிமைப் போராட்டத்திலே மட்டமானவர்களா ? ஏன், அத்தனை மொழிகளுக்கும் சமத்துவ அந்தஸ்து கொடுத்திருக்கிறார்கள் ?

"இன்றைக்கு டெல்லியிலே உள்ள மக்கள் சபையில், தமிழ்நாட்டிலிருந்து சென்றிருக்கின்ற பிரதிநிதியொருவர், தமிழிலே பேசிவிட முடியுமா ? 'பேசலாம்' என்று ஒரு இடம் வைத்திருக்கிறார்கள் ; பேசுவதென்றால், பேசுவதற்கு ஒரு வாரத்துக்கு முன் சபாநாயகரைச் சந்தித்து, 'ஐயா, நான் தமிழிலே பேச வேண்டும்' என்று கேட்க வேண்டும் ; 'பேசுவதென்றால்—நீ தமிழிலே பேசப்போவதை, ஆங்கிலத்திலேயாவது, இந்தியிலாவது முன்னாலே எழுதிக்கொடு' என்று சபாநாயகர் கேட்பார்.

மற்றவர்களுக்கு உள்ள உரிமை, அவர்கள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் தங்களுக்குத் தோன்றிய கருத்தை எடுத்து இந்தியிலும், ஆங்கிலத்திலும் பேசலாம் ; ஆனல் ஏனைய மொழிக்காரர்கள், ஒரு வாரத்திற்கு முன்பே சபாநாயகரின் முன்னிலையிலே மண்டியிட்டு, ஆங்கிலத்தில் ஒரு பிரதியைத் தர வேண்டும்—'ஏழு நாள் கழித்து நான் தமிழிலே இதைப் பேசப்போகிறேன் என்பதைத்தர வேண்டும். இதற்குப் பெயர் சனநாயகமா ? இதற்குப் பெயர் குடியரசுக் கோட்டமா ? — என்று கேட்டால், அதிலே என்ன தவறு இருக்கிறது ?

"இன்றைக்கே இந்த நிலைமை ! இவர்கள் இன்னும் இந்தியை முழுவதும் இந்த நாட்டினுடைய மொழியாக மாற்றிவிட்டால், பிறகு அந்த—முதல் வாரம் விண்ணப்ப அறிக்கை கொடுக்கின்ற—பேச்சின் பிரதியைக் கொடுக்கின்ற—அந்த நிலைகூட பறிபோய் விடும்.

"இன்றையத்தினம் இதை அவர்கள் தெரியாமல் செய்துவிடவில்லை; ஏதோ ஒரு சிறு தவறுதல் காரணமாக இப்படிப்பட்ட காரியத்தில் அவர்கள் ஈடுபட்டுவிடவில்லை. திட்டமிட்டு, சூழ்ச்சி எண்ணத்தோடு அவர்கள் இந்தக் காரியத்தைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

"இன்றையத்தினம் அவர்களுடைய தலைவர்கள் என்ன பேசுகிறார்கள்? ஜவகர்லால் நேரு பேசுகிறார்—'ஆங்கிலத்தை நாங்கள் கைவிட்டுவிடமாட்டோம்; இந்தியைக் கொண்டுவருவதாலேயே, இந்தியர்கள் ஆங்கிலத்தைக் கைவிட்டுவிட முடியாது'—என்று !

"கே. எம். முன்ஷி அவர்கள் பேசுகிறார்—'ஆங்கிலத்தை நாம் வெறுப்பது தப்பு; 'ஆங்கிலம் அன்னியனுடைய மொழி; எனவே, அதை இந்த நாட்டில் உலவவிடுவது நம்முடைய சுயமரியாதைக்கு இழுக்கு' என்று பேசுகின்றவர்கள், குறுகிய மனோபாவம் படைத்தவர்கள்; 150 ஆண்டுக்காலம் ஆங்கிலம் இந்த நாட்டிலே இருந்திருக்கிறது; நமக்கும் அதிலே அனுபவபாத்தியமிருக்கிறது'—என்று அந்தப் பெரியவர் கூறுகிறார்.

"இப்படி, காங்கிரசிலே இருக்கின்ற பல்வேறு தலைவர்கள், 'ஆங்கிலத்தையும் கைவிடமாட்டோம்' என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

"இந்த இடம்தான் நமக்குப் புரியவில்லை. ஆங்கிலத்தையும் கைவிடப்போவதில்லை; ஆனலும் இந்த நாட்டிலிருக்கின்ற அத்தனைப்பேரும், எங்களுடைய மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் கர்ஜிப்பதன் நோக்கம் தான் நமக்குப் புரியவில்லை.

"ஆங்கிலம் இருக்குமென்றால், இன்றைக்கு என்னென்ன காரியங்களுக்குப் பயன்பட்டுக்கொண்டிருக்கின்றதோ, அந்தந்தக் காரியங்களுக்கு அதை ஏதாவது ஒரு அளவிலே—ஒரு உருவத்திலே பயன்பட்டுக் கொண்டுதானிருக்கும். ஆனலும் இந்தி வேண்டுமென்கிறார்களே, அதன் நோக்கமென்ன ?

(பேச்சு முடியவில்லை)

## 142-பாதுகாப்புக் கைதிகள்

புதுடில்லி, அக். 14— இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் மொத்தம் 142-பேர் பாதுகாப்புக் கைதிகளாகச்சிறைப் படுத்தப்பட்டுள்ளனராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.